பிரித்தானிய தமிழ் மொழிப் பரீட்சைச் சபை
British Tamil Examination Board (BTEB)
www.bteb.org.uk

# தமிழ் – வாசிப்புப் பரீட்சை

# TAMIL – READING TEST

## தரம் / GRADE : 7

Version D

| Sec | Qts | Attp. | ✓ |
|---|---|---|---|
| P1 | 1-5 | | |
| P2 | 6-10 | | |
| P3 | 11-15 | | |
| P4 | 16-20 | | |
| P5 | 21-25 | | |
| | Total | | |

Additional materials:

Soft Pencil (Type B or HB)

Soft clean Eraser

**TIME** 45 Minutes

**INSTRUCTIONS TO CANDIDATES**

Do not open this booklet until you are told to do so.

Answer all questions.

Write your name, Centre number and candidate number in the spaces on this page.

**Write your answers on the question paper itself.**

Use pencil

At the end of the test you must hand in the question paper to you supervisor.

Dictionaries must not be used.

| Date | Centre Name | Centre Number |
|---|---|---|
| / / | | |

| Candidate Name | Candidate : Number |
|---|---|
| | |

This questions paper consists of 8 printed pages.

## PART – 1

### QUESTION 1 – 5

Choose the correct Tamil Statement from A to F that relates to the given English statement. And write the letter in the box.

*There is one extra letter you do not need to use.*

1. You can come here every day. ☐
2. You can't go with shoes inside. ☐
3. If you don't have an appointment, you have to wait and go in late. ☐
4. Call us before you set out on your journey. ☐
5. Vehicles more than seven and a half feet height can not pass through here. ☐

A. குறிப்பிட்ட உயரமான வாகனங்களுக்கு மட்டும் இங்கே செல்ல அனுமதி.

B. புனித தலங்களுக்கள் பாதணிகளுடன் செல்லக் கூடாது.

C. வருடம் முழுவதும் இந்தக் கடை திறந்திருக்கும்.

D. முன் அனுமதி இல்லாதவர்கள் இங்கு தாமதித்துத் தான் உள்ளே செல்லவேண்டும்.

E. பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் எமக்கு அறிவிக்கவும்.

F. கோவிலுக்கு எப்போது வேண்டுமானாலும் செல்லலாம்.

## PART – 2

### QUESTION 6 – 10

Here are six people who like different sports.
Read the following statements from A to F.
Answer the questions 6 – 10 and write the correct statments letter in the box.
There is one extra letter you do not need to use.

6. I like playing with animals. ☐
7. I like to play in the sand. ☐
8. I like this game because it helps to show off my talent. ☐
9. I like this game because there are two or less people in the game. ☐
10. I like this game because it involves team work. ☐

**A – ராஜ்**

---

ரெனிஸ் விளையாட்டு உலகில் மிகவும் பிரபலமானது. இதில் ஜரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் உலக கிண்ணத்தை எப்போதும் தட்டிக் கொள்ளும். அத்துடன் எனக்கு இது தனியாக ஒருவர் விளையாடி வெற்றி பெற முடியும் என்பதால் மிகவும் பிடிக்கும்.

**B – மோகன்**

---

உதைப்பந்தாட்டம் உலகில் இன்று எல்லா நாடுகளிலும் பிரபலமான ஒரு விளையாட்டாக உள்ளது. இது ஒரு குழுவாகச் சேர்ந்து விளையாடி வெற்றி பெறுவதால் எனக்கு இது மிகவும் பிடிக்கும்.

**C - கண்ணன்**

---

கைப்பாந்தாட்டம் இது உலகளவில் உதை பந்தாட்டத்தை விட குறைவாக பிரபலமாக இருந்த போதும் கடற்கரை அல்லது மணல் மீது அந்த மைதானம் அமைந்து இருப்பதால் எனக்கு மிகவும் பிடிக்கும். மணல் இல்லாத இடங்களில் எனக்கு  விளையாடப் பிடிக்காது.

**E - தீபா**

---

தடகள விளையாட்டுக்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். காரணம் இது ஒலிம்பிக் வரை செல்லும் ஒவ்வொருவரும் தமது தனித் திறமைகளை உலகில் நிரூபிக்க வாய்ப்பு அதிகம்.

**D – மாறன்**

---

கிறிகெட் (Cricket) உதைப்பந்தாட்டத்தை விடச் சற்றுக் கடினமானது. உதை பந்தாட்டத்தில் ஒருவரை முறை இலக்கு வைத்து பத்துப் பேர் தடுக்க பத்துப் பேர் முன்னே பந்தைக் கொண்டு செல்வார்கள். ஆனால் கிறிக்கெட்டில் பதினொருபேர் இருவரை குறி வைத்து தாக்குவார்கள். அது கொஞ்சம் விறுவிறுப்பாக இருக்கும். அதனால் எனக்கு இது பிடிக்கும்.

**F - ரூபிகா**

---

குதிரைச் சவாரி மிகவும் சிறந்த விளையாட்டு மட்டுமல்ல சிறந்த பொழுது போக்கு விளையாட்டும் ஆகும். பயிற்சிக்கேற்ப குதிரையுடன் இணைந்து வெற்றி பெறுவது மிகவும் கடினம் என்பதால் அதை ஒரு சவாலாக எடுத்து விளையாட விருப்பம்.

## PART – 3

## QUESTION 11 – 15

Read the following article and then answer the questions for 11 – 15, and choose the picture A, B, or C put a tick (✓) in the box.

இலண்டனில் பிரசித்தமான ஒரு கோவிலில் திருவிழா. வாணியும் மாலினியும் நல்ல நண்பிகள். இருவரும் அம்மன் கோவில் திருவிழாவிற்கு போகத் தீர்மானித்தனர். வாணி பாடசாலையில் இருந்து வந்ததும் தாயிடம் தன் விருப்பத்தைக் கூறினாள். அதேவேளையில் மாலினியும் தன் தாயிடம் கூறினாள். இருவரின் வீடும் இரண்டு கி.மீ தூர இடைவெளியில் இருந்தது. ஆனால் கோவிலுக்கு அருகில் வாணியின் வீடு தான் இருந்தது. அதனால் வாணியின் வீட்டுக்கு மாலினி வந்து இருவரும் வாணியின் அப்பா, அம்மாவுடன் கோவிலுக்கு போகவென முடிவெடுக்கப்பட்டது. திடீரென வாணியின் தந்தையார் வேலைக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. வாணி தன் வீட்டு தொலைபேசியில் "ஹலோ, மாலினி அப்பாவுக்கு ஏழு மணிக்கு வரமுடியாது. எட்டரை மணிக்குத் தான் வரமுடியுமாம் உனக்கு இது சரியா? அல்லது வேறு ஏதாவது வழி இருக்கிறதா..? எனக் கேட்டாள்". "அம்மாவிடம் கேட்டுவிட்டு சொல்லுகிறேன் வாணி" என பதிலளித்தாள் மாலினி. மீண்டும் "வாணி நீ என்ன பாவாடை தாவணி போடுகிறாய்" என்றாள். அதற்கு வாணி "மஞ்சள்" நிற தாவணியும் சிவப்பு நிறப் பாவாடையும்" என்றாள். "ஓ அப்படியா நானும் அதே போல் அணிகிறேன்" என்றாள். பின் இருவரும் தங்கள் அம்மாமார்களுடன் ஒரு வாடகைக் காரில் திருவிழாவிற்குச் சென்றனர். திரும்பி வரும்போது மாலினியின் அப்பாவுடன் அவரின் காரில் இரவு பத்து மணிக்கு வீட்டுக்கு வர இருந்தார்கள். ஆனால் பத்தே முக்காலுக்கு தான் அவர்கள் வரமுடிந்தது.

11. Where will Vani and Malini go?

A

☐

B

☐

C

☐

12. How did Vani and Malini go to the temple?

A

☐

B

☐

C

☐

13. How did Vani pass the message to Malini?

A

☐

B

☐

C

☐

14. What colour dress does Malini wear?

A
Blue
Red
☐


B
Red
Yellow
☐


C
Brown
Green
☐

15. What time did they return home?

A

☐

B

☐

C

☐

## PART – 4

## QUESTION 16 – 20

Read the following article about two friends are Playing in their home garden.
Are sentences 16 – 20 “Right” (A) “Wrong” (B), “Not in text” (C). Choose one of the correct answer letter A, B or C and write in the box.

எனது நண்பியின் பெயர் ரூபி. ஒரு நாள் நாங்கள் எங்கள் வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தோம். அங்கே நிறையப் பூ மரங்கள் பூத்துக் குலுங்கியவாறு இருந்தன. நாம் அவற்றிடையே ஓடி விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது பல தேனீக்கள் பறந்து அங்கு வந்தன. அவை பூக்களின் மீது அமர்ந்து தேனைக் குடித்தன. தென்றல் காற்று பூக்களை அப்போது தாலாட்டியது. அதனால் அதிலே இருந்த தேனீக்களும் ஆனந்தமாக ஊஞ்சலாடின. பார்ப்பதற்கு அந்தக் காட்சி மிகவும் அழகாக இருந்தது. தேனீக்களுடன் போட்டிபோட அழகழகான வண்ணத்துப் பூச்சிகளும் அங்கே பறந்து வந்து பூக்களில் அமர்ந்து தேன் குடித்தன. அதைப் பார்க்கப் பார்க்க எமக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது. நான் மெய்மறந்து அவற்றின் சுறு சுறுப்பை ரசித்தவாறு இருந்த பொழுது “கண்ணன் காதில் தேனீ கடிக்கப் போகிறது” என்று ரூபி கூச்சலிட்டாள்.

நான் திடீரெனக் காதைக் கையால் தட்டிய போது தேனீ பறந்து விட்டது. அழகு இருக்கும் இடம் எல்லாம் ஆபத்து இருக்கும் என்பதை இந்த ஒரு சிறு நிகழ்வு எனக்குப் புலப்படுத்தியது. மனிதர்களாகப் பிறந்து விட்டால் அழகை ரசிக்கத்தான் வேண்டும். ஆனால் அதை மெய்மறந்து அளவுக்கதிகமாக ரசிக்கும்போது அதிலிருக்கும் ஆபத்துக்களைப் புரிந்து கொண்டு அவதானமாக நடந்து கொண்டால் வாழ்வில் என்றும் சந்தோசமாக வாழலாம்.

16. Kannan and Ruby were playing at the School Park. ☐
    **A.** Right B. Wrong C. Not in text

17. Kannan and Ruby watched lots of bees. ☐
    A. Right B. Wrong C. Not in text

18. Lots of flowers are taken from here to the temple every day. ☐
    A. Right B. Wrong C. Not in text

19. A bee tried to sting Ruby’s face. ☐
    A. Right B. Wrong C. Not in text

20. Nature is beautiful, we have to appreciate this beauty. It’s human nature. ☐
    A. Right B. Wrong C. Not in text

# PART – 5

## QUESTION 21 – 25

Read the an article about students social service by their school at the week ends. Choose the correct answer letter A, B or C. And put a tick (✓) in the box.

மாணவர்கள் எப்போதும் பாடசாலைப் பருவத்திலேயே சமூக சேவைக்கான பயிற்சியைப் பெற வேண்டும். அது மட்டுமன்றி தற்காப்புக் கலைகளையும் இள வயதில் இருந்தே கற்றுக் கொள்வது அவர்களின் எதிர் காலத்துக்கு நன்மை பயக்கும்.

குமரனின் பாடசாலையில் சமூகசேவைக்கு என ஒரு பாடத்தையும், அதற்கான நேரத்தையும் ஒதுக்கிப் பல பிரிவுகளாக வாரந்தோறும் வார இறுதியில் சமூகசேவைப் பயிற்சிகளையும் பாடசாலை நடத்தி வருகிறது.

வார இறுதியின் சனிக்கிழமைகளில் மூன்று குழுவாகப் பிரித்து முதலாவது குழு குமரனின் தலைமையில் வைத்தியசாலை நோயளிகளுக்குப் புத்தகங்களையும் கதைகளையும் வாசித்துக்காட்டவும், இரண்டாவது குழு சேனனின் தலைமையில் பொது விளையாட்டு மைதானத்தைத் துப்பரவாக்கவும், மூன்றாவது குழு கீர்த்திகாவின் தலைமையில் பாடசாலை வளாகத்திற்குள் குப்பைகளைத் துப்பரவாக்கி பொருத்தமான இடங்களில் மலர்ச் செடிகளை நாட்டுவதற்கு எனத் தெரிவு செய்யப்பட்டு, இவர்களில் ஒவ்வொரு குழுவுக்கும் ஒருவர் பொறுப்பாக மூன்று ஆசிரியர்களும் முன்வந்தனர்.

ஒவ்வொரு குழுவிலும் பத்து மாணவர்கள் இருந்தனர். அதில் ஆண்களும், பெண்களுமாக மிகவும் உற்சாகமாகப் பணியில் ஈடுபட்டனர். திங்கட்கிழமை காலையில், கடந்த சனிக்கிழமை சமூக சேவையில் ஈடுபட்ட மாணவர்களுக்கு அதிபரால் பாடசாலை சார்பாக பாராட்டுக்களும் பாடசாலை சமூக சேவைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

21. Why do students need to do social service?

A - for earning money ☐

B - To earn a good name at school ☐

C - Learn for their future benefits ☐

22. How many social work groups does Kumaran's Class have?

A - 2 ☐

B - 3 ☐

C - 5 ☐

23. Who’s group will go to the hospital service?

A - Sennan ☐

B - Keerthiga ☐

C - Kumaran ☐

24. Where does Keerthika’s group do their service?

A - Hospital ☐

B - Public ground ☐

C - School play ground ☐

25. How many students are participating in each group?

A - 5 ☐

B - 10 ☐

C - 8 ☐